செய்தி வெளியீடு எண்.45-2019 நாள்: 18.11.2019

## விழுப்புரம் நகராட்சி மைதானத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 879 பயனாளிகளுக்கு ரூ.1,24,34,730/- மதிப்பீட்டில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

******

விழுப்புரம் நகராட்சி மைதானத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 879 பயனாளிகளுக்கு ரூ.1,24,34,730/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (18.11.2019) வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் வருவாய் மற்றம் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை 55 பயனாளிகளுக்கு ரூ.6,60,000/- மதிப்பீட்டிலும், விதவைக்கான உதவித்தொகை 182 பயனாளிகளுக்கு ரூ.21,84,000/- மதிப்பீட்டிலும், முதியோர் உதவித்தொகை 252 பயனாளிகளுக்கு ரூ.30,24,000/- மதிப்பீட்டிலும், வீட்டுமனைப்பட்டா 141 பயனாளிகளுக்கு ரூ.65,66,730/- மதிப்பீட்டிலும் நத்தம் பட்டா 44 பயனாளிகளுக்கும், பட்டா மாற்றம் - முழு புலம் 80 பயனாளிகளுக்கும் மற்றும் உட்பிரிவு மாற்றம் 125 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 879 பயனாளிகளுக்கு ரூ.1,24,34,730/- மதிப்பீட்டில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்ததாவது.

விழுப்புரம் மாவட்டம் தமிழகத்திலேயே மிகப்பெரிய மாவட்டம். மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது கிராமப்புற மக்களின் வாழ்வு மேம்பட வேண்டும், நகர்புறத்தில் இருக்கும் வசதிகள் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க வேண்டும், இதில் குறிப்பாக மகளிர் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள். தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசு நலத்திட்டங்களை நேரடியாக பெற்று பயன்பெறவேண்டும் உயரிய நோக்கத்தோடு இந்த முதலமைச்சர் சிறப்பு குறைதீர்ப்பு முகாம் தமிழகம் முழுவதும் நடத்தப்படுகிறது. இந்த முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்ப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உரிய காலத்திற்குள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில் நமது விழுப்புரம் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும், நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் இந்த முதலமைச்சர் சிறப்பு குறைதீர்ப்பு முகாம் நடத்தப்பட்டு மாவட்ட முழுவதும் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெற்று கொண்டிருக்கிறது. விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 70,719 மனுக்கள்

ஏழை எளிய பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்களில் பெரும்பாலும் மாற்றுத்திறனாளிக்கான உதவித்தொகை, முதியோருக்கான உதவித்தொகை, விதவைகளுக்கான உதவித்தொகை போன்ற சமூக பாதுகாப்பு திட்டங்களில் மட்டும் 30,219 மனுக்கள் வரப்பெற்றுயிருக்கிறது. மாவட்டத்தில் பெறப்பட்ட 70,719 மொத்த மனுக்களையும் சம்மந்தப்பட்ட அந்தந்த துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு உரிய விசாரணை செய்து தகுதியுடைய 8,481 நபர்களுக்கு பல்வேறு துறைகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. விழுப்புரம் வட்டத்தில் மட்டும் 879 பயனாளிகளுக்கு ரூ.1,24,34,730/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் இந்நிகழ்ச்சியில் வழங்கப்படவுள்ளது. மேலும் இந்த முதலமைச்சர் சிறப்பு குறைதீர்ப்பு முகாமில் 70,719 மனுக்களை பெற்று உரிய காலக்கட்டத்திற்குள் விசாரணை செய்து 8,481 ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடு செய்த மாவட்ட நிர்வாகத்திற்கும் மற்றும் அரசு அலுவலர்களுக்கும் நன்றியை கூற கடமைப்பட்டு உள்ளேன் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து விழுப்புரம் நகராட்சி அலுவலகம், காவலர் பயிற்சி மற்றும் சமுதாயக்கூடம், வளவனூர் பேரூராட்சி ஆகிய இடங்களில் நடைபெறும் முதலமைச்சர் சிறப்பு குறைதீர்ப்பு முகாம்களில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.சக்ரபாணி (வானூர்), திரு.எம்.ஆர்.முத்தமிழ்ச்செல்வன் (விக்கிரவாண்டி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இராஜேந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.த.அம்புரோஸியாநேவிஸ்மேரி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) திரு.பாலுசாமி, ஆவின் தலைவர் திரு.பேட்டை வி.முருகன், மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை தலைவர் திரு.பசுபதி, விழுப்புரம் வட்டாட்சியர் திரு.கணேஷ், மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.